# பொய் என்பது ஒரு பயங்கரமான காரியம்

1

சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

(படங்களுடன்)

நீதிமொழிகள் 12:22
பொய் உதடுகள்
கர்த்தருக்கு
அருவருப்பானவைகள்;
உண்மையாய்
நடக்கிறவர்களோ
அவருக்குப் பிரியம்.

**Pro 12:22 Lying lips are abomination to the LORD: but they that deal truly are his delight.**

**"அருவருப்பானவைகள்"** என்ற வார்த்தையானது ஆங்கில வேதாகமத்தில் **abomination** என்று உள்ளது.

**'abomination' என்ற வார்த்தைக்கு வேறு அர்த்தங்களும் உண்டு. அவற்றில் சில:**

1. பெரு வெறுப்பு உண்டாக்கும் பொருள்
2. மிக்க அருவருப்பு
3. வெறுப்புண்டாக்கு
4. குமட்டல்
5. வெறுப்புணர்ச்சி தூண்டு
6. கடுவெறுப்பு

7. குமட்டுதல் உண்டாக்கு
8. முற்றிலும் வெறுத்து ஒதுக்குதல்
9. அறவே வெறுத்தொதுக்குதல்

அப்படியானால் இந்த வசனத்தை இப்படியும் வாசித்துப்பார்க்கலாமா?

**1. பொய் உதடுகள் கர்த்தருக்கு** பெரு வெறுப்பு உண்டாக்குவதாக இருக்கிறது.

**2. பொய் உதடுகள் கர்த்தருக்கு** மிக்க அருவருப்பு உடையதாயிருக்கிறது.

**3. பொய் உதடுகள் கர்த்தருக்கு** வெறுப்புண்டாக்குகிறது.

**4. பொய் உதடுகள் கர்த்தருக்கு** வெறுப்பைத் தூண்டுகிறது.

**5. பொய் உதடுகள் கர்த்தருக்கு** கடும் வெறுப்பாயிருக்கிறது.

**6. பொய் உதடுகள் கர்த்தருக்கு** குமட்டுதல் உண்டாக்குகிறது.

**7. பொய் உதடுகள் கர்த்தருக்கு** முற்றிலும் வெறுத்து ஒதுக்குவதாக உள்ளது.

**8. பொய் உதடுகள் கர்த்தருக்கு** அறவே வெறுத்தொதுக்குவதாக இருக்கிறது.

பொய் என்பது ஒரு பயங்கரமான காரியம்.

பொய் பேசும்படியாய் சரீரம் உண்டாக்கபடவில்லை.

அவ்வளவு ஒரு பயங்கரமான காரியமாய் இருப்பதினால், நீ பொய் சொல்லும்போது, உன்னுடைய முழு நரம்பு அமைப்பையும் அது மாற்றி போடுகிறது



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## செய்தி: 65-10-31A வழி நடத்தும் தன்மை

40. நீ நல்லவனாய் இருக்க முடியும், களவு செய்யாதே, புகை பிடிக்காதே, பொய் சொல்லாதே, அப்பா அம்மாவிடம் பொய் சொல்லாதே, அந்த முதல் பொய்யை சொல்லாதே, ஏனென்றால் ஒன்று ஒன்றை சொல்லும் அதன் பிறகு இன்னொரு பொய் சொல்லுவது மிகவும் எளிது புரிகிறதா?

ஆனால் நீங்கள் அதை செய்யக்கூடாது. முதலாவது பொய்யை சொல்லாதேயுங்கள்.



**41. பொய் சொல்லும்படியாய் உங்கள் சரீரம் உண்டாக்கப்படவில்லை என்று அறிவீர்களா?**

உங்களுக்குத் தெரியுமா அதற்கென்று இப்பொழுது ஒரு கருவி இருக்கிறது, அது உன் நரம்பிலே உள்ளது, உன்னுடைய மணிக்கட்டில் ஒரு பட்டையை கட்டி ஒன்றை உன் தலையின் மேல் கட்டி, பின்பு நான் சொன்னேன் என்று அங்கே சொல்லுங்கள்.

நான் அதைக் குறித்து பொய் சொன்னேன் என்று சொல்லுங்கள். ஆனால் நான் உண்மையைத்தான் சொல்கிறேன். அவர்கள் நம்பும்படியாக நான் அவ்வளவு சுலபமாய் என்னால் சொல்ல முடியும்.



54. அவர்கள் சொல்வார்கள், "நீ அந்த குறிப்பிட்ட இடத்தில் இருந்தாயா, ஞாயிற்றுக்கிழமை பகல் இன்னின்ன நாளிலே சகோதரன். பிரான்ஹாம் பிரசங்கித்த போது நீ சகோதரன். சாண்ட்ஸின் டிரெய்லரில், (Shatnz's Trailer) உட்கார்ந்து

கொண்டு இருந்தாயா'' என்பது போன்று,

"இல்லை ஐயா, நான் அங்கே உட்காரவில்லை, இல்லை ஐயா,'' என்று சொல்வீர்கள்.

அந்தப் பொய் கண்டுபிடிப்பு கருவி என்ன சொல்லும் என்று உங்களுக்கு தெரியுமா, "ஆம் ஐயா, நீர் உட்கார்ந்தீர் ஆம் ஐயா, நீர் உட்கார்ந்தீர்'' என்று சொல்லும்.

"நான் செய்யவில்லை" என்று நீ சொல்வாய், அது சொல்லும் "ஆம் நீ செய்தாய்" என்று, ஏன்?

**55.** **ஏனென்றால் பொய் என்பது ஒரு பயங்கரமான காரியம்.**

**பொய் பேசும்படியாய் சரீரம் உண்டாக்கபடவில்லை.**

**அவ்வளவு ஒரு பயங்கரமான காரியமாய் இருப்பதினால், நீ பொய் சொல்லும்போது, உன்னுடைய முழு நரம்பு அமைப்பையும் அது மாற்றி போடுகிறது.** வியூ..

**ஒருவிதமான உள் வளர்ச்சி போன்றவை ஏற்படும் அளவிற்கு மாற்றத்தை உண்டாக்கி அது உன்னை கொன்றுபோடும்.**

**அப்படியானால் பொய் என்பது ஒரு கெட்ட காரியம், ஏனெனில் நீங்கள் பொய்**

சொல்ல, களவு செய்ய, இப்படிப்பட்ட காரியங்கள் எதையும் செய்ய வேண்டியவர்கள் இல்லை.



உங்கள் ஆத்துமாவில் எந்தவொன்றும் எழும்பி உங்களுக்குள் கசப்பை போட்டு விட இடம்கொடாதிருங்கள். உங்களை ஒருவர் எவ்வளவு மோசமாக நடத்தியிருந்தாலும் சரி, அதைப் பொருட்படுத்த வேண்டாம். ஒருபோதும் கசப்பு வேண்டாம். உங்களுடைய ஆத்துமாவில் கசப்பானது நங்கூரமிட்டுவிடும் குற்ற உணர்வு உடையவர்களாக ஆகாதிருங்கள். அதுதானே பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தி, உங்களைவிட்டு நீங்கச் செய்து விடும். நிச்சயமாக அதுதான் நடக்கும்



## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

### செய்தி: பத்து கன்னிகைகள்
### THE TEN VIRGINS

டிசம்பர் 11, 1960 பிரான்ஹாம் கூடாரம்
இந்தியானா, அமெரிக்கா

**உங்கள் ஆத்துமாவில் எந்தவொன்றும் எழும்பி உங்களுக்குள் கசப்பை போட்டு விட இடம்கொடாதிருங்கள்.**

**உங்களை ஒருவர் எவ்வளவு மோசமாக நடத்தியிருந்தாலும் சரி, அதைப் பொருட்படுத்த வேண்டாம். ஒருபோதும் கசப்பு வேண்டாம்.**

உங்களுடைய ஆத்துமாவில் கசப்பானது நங்கூரமிட்டுவிடும் குற்ற உணர்வு உடையவர்களாக ஆகாதிருங்கள். அதுதானே பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தி, உங்களைவிட்டு நீங்கச் செய்து விடும். நிச்சயமாக அதுதான் நடக்கும்.

75. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக நான் இங்கே ஒரு தவறான காரியத்தைப் பேசிவிட்டிருந்தேன். வழக்குரைஞர்கள் என்னை அழைத்திருந்தனர்... என் மனைவி அங்கே அமர்ந்திருக்கிறாள்... ஏதோ

என் தலையே பிரிந்து வந்ததைப் போல் நான் உணர்ந்தேன். நான் திரும்பிப் போய்விட்டேன். அவர்கள் தொலை பேசியின் மூலமாக “இன்று மதியம் அங்கு வரும்படி அவரிடம் சொல்லுங்கள்” என்று என் மனைவியிடம் கூறினார்கள்.

மேடா என்னிடம் கூறினாள் “வழக்குரைஞர்கள் பேசினார்கள்” என்றாள்.

நான் வாசலை விட்டு வெளியே நழுவிக்கொண்டே, “நான் இங்கே இல்லை என்று கூறிவிடு” என்று அவளிடம் சொன்னேன்.

“பில்” என்று அவள் கூறினாள்.

“இப்பொழுது நான் இங்கே இல்லை என்று கூறிவிடு” என்றேன் நான். அப்படிச் சொல்லிவிட்டு நான் வெளியே போய் விட்டேன்..

76. பிறகு நான் வெளியே போய்விட்டு, மனதில் மிகவும் துக்கமடைந்தவனாய் வீடு திரும்பினேன். அவள் வழக்குரைஞரிடம் நான் சொன்னதை கூறிவிட்டாள். அக்காரியம் அவளை மிகவும் புண்படுத்தியிருந்ததை நான் கண்டேன்.

77. வியாதியுற்றிருந்த ஒரு சிறு குழந்தைக்காக ஜெபிக்கும்படி ஒரு

மனிதன் வந்திருந்தார். நான் அதற்காக ஜெபிக்கப் போனேன். அக் குழந்தையின் மேல் நான் என் கையை வைத்து ஜெபிக்க ஆரம்பித்தபொழுது, ஏதோ ஒன்று என்னிடம், "நீ ஒரு மாய்மாலக் காரன், நீ என்ன செய்தாய் என்று நீ அறிவாய்" என்றது.

78. நான் அம்மனிதனிடம், "ஐயா, நான் உமது குழந்தைக்காக ஜெபிக்க அருகதையற்றவன். என்னில் உள்ள பரிசுத்த ஆவி யானவர் துக்கமடைந்துள்ளார். நான் குழந்தையின் மேல் என் கைகளை வைத்து ஜெபிக்க எனக்கு

தேவையில்லை. நான் என்னை சரி பண்ணிக்கொண்டு வருமளவும் காத்திருங்கள்” என்றேன்.

79. நான் எனது வழக்குரைஞரிடம் போய், “நான் தவறு செய்தேன்” என்று கூறினேன்.

80. “நீங்கள் வெளியே போய்விட்டிருந்தீர்கள் என்று நான் நினைத்தேன்” என்றார்.

81. “இல்லை, தவறான ஒன்றை உங்களிடம் சொல்லும்படி நான் என் மனைவியை ஆக்கிவிட்டேன். நான் அதற்காக வருந்துகிறேன். நான் அதை வேண்டுமென்றே

செய்யவில்லை. என்னை அதற்காக மன்னிப்பீர்களா?” என்று நான் அவரிடம் கேட்டேன்.

82. அந்த விஷயத்தில் என்னை மன்னிக்கும்படி என் மனைவியை யும் கேட்டேன்.

83. அதற்குப் பிறகு க்ரீன்ஸ் மில் என்ற இடத்திற்கு நான் சென் றேன். அது ஒரு ஜூலை மாதத்தில் நடந்தது. அந்த சமயத்தில் அங்கே காட்டில் மிகவும் நிசப்தமாக இருக்கும். நான் குகையில் அந்த மதியம் முழுவதும் ஜெபித்துக் கொண்டேயிருந்தேன். நான் குகையை விட்டு வெளியே போய்,

பாறையின் மேல் போய் நின்றேன். என்னால், மலைகளுக்கு அப்பாலும் பார்க்க முடிந்தது. மிகவும் அழகான காட்சியாயிருந்தது; இலைகள் மற்றும் யாவும் அசையாமல் அமைதியாக இருந்தது. அப்பொழுது மாலை சுமார் 5 மணி இருக்கும், அல்லது 6 இருக்கும். அது கோடை காலமாயிருந்தது, ஒன்றும் அசையவில்லை, மிகவும் அமைதியாயிருந்தது. மிகவும் உஷ்ணமான பகலாக அன்று இருந்தது. “பரம பிதாவே, ஒரு சமயம் நீர் மோசேயை பாறையின் மேல் நிறுத்தி அவனுக்கு முன்பாக கடந்து சென்றீர். நான் செய்த

பொல்லாங்கை நீர் மன்னித்தருளுவீரானால், நீர் மீண்டும் ஒரு தடவை எனக்கு முன்பாக கடந்து சென்று நான் உம்மை காணும்படி செய்வீரா?” என்று கேட்டேன். அப்பொழுது எனது இடது பக்கத்தில் உள்ள மலையின் பக்கமாக சிறு சுழற்காற்று உண்டாகி, இலைகளை நன்கு அசையச் செய்து என் பக்கமாக அது தாழ இறங்கிவந்து வீசி, காட்டுக்குள் கடந்து சென்றது. அதைக் கண்டு நான் ஒரு குழந் தையைப் போல் கதறினேன்.

**84.** நான் வீட்டுக்குத் திரும்பிச் சென்று, “என் பாவம் இப்பொழுது எனக்கு மன்னிக்கப்பட்டது என்று அறிவேன்” என்று கூறினேன், பாருங்கள்?

**85.** எப்பொழுதும் கசப்பான வேர் உங்களைவிட்டு அகன்று போகும்படி பாருங்கள். உங்களுக்கு யார் என்ன சொன்னாலும் அதைப்பற்றி பொருட்படுத்த வேண்டாம். தேவன் அங்கே இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். அப்பொழுது, அது பொல்லாங்கு யாவையும் உங்களை விட்டு அகன்றிருக்கும்படி செய்யும்.



## BRO. BRANHAM:

~~~~~~~~

மக்கள் யாரையாவது கடுமையாக வெறுத்தால், நினைவில் கொள்ளுங்கள், இழிவாகக் கருதுதல் அல்லது கடும் வெறுப்பை காண்பித்தால் அது ஒரு மோசமான பிசாசாகும். நீங்கள் அவ்வாறு செய்யவே கூடாது.

~~~~~~~~

செய்தி: **59-12-23** கேள்விகளும் பதில்களும் **COD** #11

Bro. Branham :

தேவனிடத்தில் அன்பு
கூறுகிறவர்களுக்கு, சகலமும்,
நன்மைக் கேதுவாய் நடக்கிறது
என்று வேதவாக்கியங்கள் மூலம்
நாம் போதிக்கப்பட்டிருக்கிறோம்.
அங்கே காரியங்கள் காண்பதற்கு,
எவ்வளவு மோசமாக இருந்தாலும்,
அது பொருட்டல்ல! நினைவில்
கொள்ளுங்கள், அது உங்களுடைய
நன்மைக்காகவே நடந்தாக
வேண்டும். அதற்காக, நான்
மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

# சாத்தான் ஒரு பெரிய யுத்தத்தைச் செய்யும் போது

நான் இதை என்னுடைய ஜீவிய பிரயாணத்தில், குறிப்பாக எனது ஊழியத்தில் கண்டு கொண்டேன், சாத்தான் ஒரு பெரிய யுத்தத்தைச் செய்யும் போது, அங்கே ஒரு மகத்தான ஆசீர்வாதம் இருக்கப் போகிறது என்று அவனுக்குத் தெரியும். எனவே அச்சமயங்களில் எப்போதுமே அவ்வாறே இருக்கிறது, நாமோ தொடர்ந்து செல்லவே விரும்புகிறோம்.

சகோ. பிரன்ஹாம்

செய்தி: சேபாவின் இராஜஸ்திரீ, 59-0405E, para 2

I found it in my life's journey, and especially in my ministry, that when Satan makes a big fight, he knows there's a great blessing laying ahead. So it's always at those times that we like to go on.

THE.QUEEN.OF.SHEBA_ LA.CA SUNDAY_ 59-0405E, para 2

ஓ, சகோதரரே, **நமக்கு அன்பார்ந்தவர்களை விசுவாச வீட்டாரை, இந்த வீட்டிற்குள் கொண்டு வரவேண்டிய நேரம் ஒன்று உண்டென்றால் அது இன்றைக்கே அவர்களை உள்ளே கொண்டு வாருங்கள்** ஏனெனில் ஒரு பலத்த அதிர்ச்சி வரப்போகிறது. **நமது தகப்பன்மார்களும் தாய்மார்களும் சகோதரரும் சகோதரிகளும் இந்த வீட்டில் மாத்திரமே பாதுகாப்பாயிருப்பார்கள்.** ஏனெனில் தேவனுடைய வல்லமை இந்த நாட்டை மீண்டும் ஒருமுறை குலுக்கப்போகின்றது. அது அவ்விதம் செய்யப்போகின்றது. **விசுவாச வீட்டார் மாத்திரமே காக்கப்படுவர்.**

Message: 60-09-11M *நான் மோசேயோடே இருந்தது போல உன்னோடும் இருப்பேன்*

# வீட்டார் இரட்சிக்கப்பட







பவுல் அந்த ரோம சேவகனிடம், ''கர்த்தராகி இயேசு கிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்'' என்றான் (அப் 16:31). நீங்கள் இரட்சிக்கப் பட உங்களுக்கு போதிய விசுவாசம் இருக்குமானால், உங்கள் மகனோ மகளோ எவ்வளவாக வழி தவறி சென்றிருந்த போதிலும், அவர்கள் எப்படியாயினும் இரட்சிப்படைவார்கள் என்னும் போதிய விசுவாசத்தைப் பெற்றிருங்கள்; தேவன் எப்படியாயினும் அவர்களை இரட்சிப்பார். தேவன் அதை வாக்களித்துள்ளார்- அந்த சுதந்தரத்தை.





# அவர் மிகச் சிறந்ததைப் பெற்றுக் கொள்கின்றாரா என்பதைப் பார்த்துக் கொள்

பார், என் அருமை சகோதரனே, உன் தந்தையை நீ கவனித்துக் கொண்டால் பாக்கியவானாயிருப்பாய், ஏனெனில் உன்னை கவனித்துக் கொள்ள முடியாத நிலையில் நீ இருந்த போது, உன் தந்தை உன்னை கவனித்துக் கொண்டார். முதலாம் கற்பனை ஒரு வாக்குத்தத்தத்தைக் கொண்டுள்ளது: ''பூமியில் உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு - கர்த்தர் நீடித்த நாட்களை உனக்குக் கொடுப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.'' பார்? உன்னால் முடிந்த எந்த விதத்திலாவது உன் தந்தைக்கு உதவியாயிரு. அவர் மிகச் சிறந்ததைப் பெற்றுக் கொள்கின்றாரா என்பதைப் பார்த்துக் கொள்.

Rev. William Branham

செய்தி: கேள்விகளும் பதில்களும், (COD 2:19), பத்தி எண் 229

**சகோ. பிரன்ஹாம்:**

தேவனுக்காக எதையாவது எப்பொழுதாவது செய்த மனிதர்கள் தேவனோடு தனியாகவே நின்றனர் என்பதை ஞாபகம் கொள்ளுங்கள். பாதையில் இரண்டு பேருக்கு மாத்திரமே இடமுண்டு. அது நீங்களும் தேவனும் தான். நீங்கள்... வார்த்தையின்படியுள்ள நம்பிக்கைக்கு உட்பட்டு எப்பொழுதாவது எதையாவது செய்த மனிதர்கள் தனித்தே நின்றனர்: மார்ட்டின் லூத்தர், ஜான் வெஸ்லி, அவர்களைப் போன்றவர்கள், ஃபின்னி, சாங்கி, கால்வின், நாக்ஸ், ஸ்பர்ஜன், மற்றவர்கள். பாருங்கள்? மோசே, எலியா, அவர்கள் அனைவருமே தேவனுடைய வார்த்தையின் பேரில் தனியாக நின்றனர். அந்தவிதமாகத்தான் நீங்கள் இருக்க வேண்டும். அது ஒரு தனிப்பட்ட நபருடைய விவகாரமாக உள்ளது. நீங்கள் தேவனுடைய வார்த்தையை எடுத்துக் கொண்டு, வார்த்தையின் பேரில் நிற்க வேண்டும்.

*செய்தி: யூகித்தல்*

**நிச்சயமாக, நீங்கள் தவறாகப் புரிந்து கொள்ளப் படுவீர்கள், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக தேவ பக்தியுள்ள எல்லாரும் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவார்கள். நீதிமானாகிய நோவா முதற்கொண்டு இன்று உள்ள நவீன – நாள் பரிசுத்தவான் வரையிலும் தவறாகப் புரிந்து கொள்ளப்படுவர். எப்பொழுதுமே அவ்விதமாகத் தான் உள்ளது, ஜனங்கள் அதை தவறாகப் புரிந்து கொள்வர்.**

செய்தி: தேவன் தவறாகப் புரிந்து கொள்ளப்படுதல், பத்தி எண் 250

**சகோ. பிரன்ஹாம்:**

ஒரு மனிதன் ஒரு ஸ்திரீயை கனம் பண்ணுவான், அவளோ கரிக்கட்டையைப் போன்று எவ்வளவு கறுப்பாக இருக்கலாமோ அவ்வளவு கறுப்பாக இருக்கலாம்; ஆனால் அவன் அந்த ஸ்திரீயை ஒரு ஸ்திரீயாகக் காண்கிறான்; ஒரு ஸ்திரீக்கு ஏற்றபடியான கௌரவத்திற்காக அவள் நிற்கிறாள். ஒரு உண்மையான மனிதன் அவளைப் பார்த்து தன்னுடைய தொப்பியைக் கழற்றி **(take off)** (அவளை கனம் பண்ணுவான்) (அது சரியே.), காரணம் என்னவென்றால் எது சரியென்ற நல்நடத்தைக்காக அவள் நிற்கிறாள். அது முற்றிலும் சரியே. அவளை முற்றிலுமாக அசட்டை செய்யும் அளவுக்கு, அவள் அவ்வளவு விகாரமாக தோற்றமளிக்கலாம்; இந்த ஹாலிவுட் இராணிகளில் (அல்லது அது என்னவாகவும் இருக்கலாம்), ஒருவளுக்கு கொடுக்கப்படும் கனத்தைக் காட்டிலும் ஆயிரம் மடங்கு கனத்தை அவள் கொண்டிருப்பாள், ஒருவன் உண்மையான மனிதனாக இருப்பதற்கேற்ற காரியத்தை பெற்றிருப்பான் என்றால். அது உண்மை.

# நீங்கள் ஒருவருக்கொருவர் நகைச்சுவை மற்றும் ஏளனம் கூட நீங்கள் செய்யக் கூடாது

வேதாகமம் கூறுகிறது - இயேசு, “உங்கள் ‘ஆம்’ என்பது ‘ஆம்’ என்றும் உங்கள் ‘இல்லை’ என்பது ‘இல்லை’ என்றே இருக்கட்டும், இதற்கு மிஞ்சினது பாவத்தினால் வருகிறதாயிருக்கும்,” என்றார். நீங்கள் ஒருவருக்கொருவர் நகைச்சுவை மற்றும் ஏளனம் கூட நீங்கள் செய்யக் கூடாது. நீங்கள் பேசுகின்ற ஒவ்வொரு உபயோகமற்ற சொல்லுக்கும் தேவன் உங்களை கணக்கொப்புவிக்கச் செய்வார். அதை நீங்கள் அறிவீர்களா? ஒவ்வொரு வீணான வார்த்தைக்கும் நீங்கள் கணக்கு கொடுக்க வேண்டும் என்று வேதம் கூறுகிறது. ஆகவே எப்படிப்பட்ட ஒரு ஜனமாக நாம் இருக்க வேண்டியவர்களாகவுள்ளோம்?

Rev William Branham

செய்தி: எங்கள் நம்பிக்கை தேவனிடத்தில் இருக்கிறது, 51-0929

# நீங்கள் தேவனுக்காக எதையாகிலும் செய்ய விரும்பினால், அவருடைய ஜனங்களுக்கு எதையாகிலும் செய்யுங்கள்.

# அநீதியான நீதிபதி, மாஜீஸ்ட்ரேட் மற்றும் இன்னாருக்கு முன்பாக செல்லக்கூடாது

~~~~~~~~

பவுல் “நீங்கள் அவிசுவாசிகளிடத்திற்கும் வழக்கறிஞர்களிடமும் ஏன் செல்கிறீர்கள், பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா?” என்றான். இவ்வித காரியங்கள் சபைக்கு முன்பாக நியாயந்தீர்க்கப்பட வேண்டும், அநீதியான நீதிபதி, மாஜீஸ்ட்ரேட் மற்றும் இன்னாருக்கு முன்பாக செல்லக்கூடாது, ஆனால் நம்முடைய காரியங்கள் சபைக்கு முன்தான் கொண்டு வரப்பட வேண்டும். நீங்கள் அங்கே ஒருவருக்கொருவர் சட்டத்திற்கு கொண்டு செல்கிறீர்கள்.

கேள்விகளும் பதில்களும் [COD 1:9], ஜூன் 28, 1959, பத்தி எண் 127
~~~~~~~~

# நீங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் நியாயத்தீர்ப்பில் உங்களைச் சந்திக்கும்




... நீங்கள் பேசும் ஒவ்வொரு வார்த்தையும் நியாயத்தீர்ப்பின் போது உங்களைச் சந்தித்து, உங்களை ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுத்தும்; அல்லது உங்களை இரட்சிக்கும்.

சகோ. பிரன்ஹாம்

செய்தி: அவருடைய வருகையின் அடையாளமாக பிரகாசிக்கும் சிகப்பு விளக்கு, பத்தி எண் 92

# நீங்கள் எதை வாசிக்கிறீர்களோ அதுதான் உங்களுடைய குணாதிசயத்தை உருவாக்குகிறது

~~~~~~~~~~~~~

ஆனால் நான் இதை வாலிப பிள்ளைகளிடம்
கூறியாக வேண்டும். ஆபிரகாம் லிங்கன் தாம் 21
வயதைக் கடப்பது வரையில் தம்முடைய
ஜீவியத்திலேயே வேதாகமத்தையும், ஃபாக்ஸ்
எழுதிய இரத்தசாட்சிகளின் புத்தகத்தையும் தவிர
வேறு எந்த புத்தகத்தையும் ஒருபோதும்
சொந்தமாகக் வைத்திருக்கவில்லை என்பது
உங்களுக்குத் தெரியுமா? பாருங்கள்? நீங்கள் எதை
வாசிக்கிறீர்களோ அதுதான் உங்களுடைய
குணாதிசயத்தை உருவாக்குகிறது **(molds)**!

*செய்தி: தாய்மார்களின் தினம்*

~~~~~~~~~~~~~

But I might pass this on to the young people. Do you know Abraham Lincoln never owned a book in his life, until he was after twenty-one years old but the Bible and the Foxe "Book Of The Martyrs." See? what you read molds the character that you are.

MOTHER'S.DAY_ JEFF.IN V-25 N-1 SUNDAY_ 59-0510M

சகோ. பிரன்ஹாம்:

# நீங்கள் கிறிஸ்தவர் என்று அழைக்கப்பட தகுதியற்றவர்கள்



நீங்கள் சகோதர சகோதரிகளாக இருந்துகொண்டே, தொலைபேசியில் ஒருவர் மற்றவரைக் குறித்து குறை கூறினால், நீங்கள் கிறிஸ்தவர் என்று அழைக்கப்பட தகுதியற்றவர்கள். உண்மை. உங்களால் ஒருவரைக் குறித்து நன்மையானதைப் பேச முடியாவிட்டால், நீங்கள் தொலைபேசியில் பேசுவதையே விட்டு விடுங்கள். நீங்கள் பேசவே வேண்டாம். தேவன் உங்களை பொறுப்பாளியாக்குவார் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அந்த விதமான ஆவி உங்களில் இருக்கும் வரைக்கும் நீங்கள் தேவனுடன் சரியாக இல்லை.

Rev. William Branham



சகோ. பிரன்ஹாம்:

நான் – நான் இதை பயபக்தியோடு கூறுகிறேன். ஒரு ஏழை மனிதனாய் இருப்பதையே நான் மிகவும் விரும்புகிறேன். நான் ஒரு கோடீஸ்வரனாக இருக்க வேண்டுமென்று விரும்பியிருந்தால், அவ்வாறு இருந்திருக்க முடியும்.

And I--I say this with reverence. My choice is to be a poor man. I could've been a multi-millionaire if I had wanted to be.

Rev. William Branham

**செய்தி**: ***சுயசரிதை,*** 53-1108A


சகோ. பிரன்ஹாம்:
தேவனால்
அழைக்கப்பட்ட
எந்த ஒரு மனிதனும்
சுவிசேஷத்தைப்
பிரசங்கிக்க
வேண்டியது
அவசியம்.

# தேவனுடைய கோபத்தை நிறுத்துவது




## தேவனுக்கு முன்பாக மனந்திரும்புதல் அவருடைய கோபத்தை நிறுத்துகிறது.

சகோ. பிரன்ஹாம்

**செய்தி:** எச்சரிக்கை அதன்பிறகு நியாயத்தீர்ப்பு, ஜூலை 24, 1963, பத்தி எண் 116

இப்பொழுது, எல்லாவற்றிற்குமே ஒரு நேரம் உண்டு. அது ஒரு பழைய அமெரிக்க சுலோகம், அது உண்மை தான்.

செய்தி: காலம் சமீபமாயிருக்கிறது, 56-0408E, பத்தி எண் 16

Now, there's time for all things. That's an old American slogan, and it's true.

THE.TIME.IS.AT.HAND_ CHICAGO.IL SUNDAY_ 56-0408E

Only believe, Only believe
All things are possible, Only believe.

சகோ. பினேகாஸ்
போன்: 8838623242, 9551855108
Email: jebakumarsa@gmail.com
www.thefinish.in